# ஸ்தோத்ர - -
# - ராமாயணம்



கம்பராமாயணத்திலிருந்து

வரகவி - திரு - அ - சுப்ரமண்யபாரதியாரால்

திரட்டப்பெற்றது.

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,
புத்தக வியாபாரம்,
பேரம்பூர் - சென்னை.

Copy Right.] 1934. [விலை அணா 2.

உ

செந்திலாண்டவன் திருவடிதுணை.

2633

# ஸ்தோத்ர :: :: ராமாயணம்

கம்பராமாயணத்திலிருந்து

வரகவி - திரு - அ - சுப்ரமண்யபாரதியாரால்

திரட்டப்பெற்றது.

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,

புத்தக வியாபாரம்,

பெரம்பூர் - சென்னை.

*Copy Right.*] 1934 [விலை அணா 2.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

# முகவுரை.

கம்பராமாயணத்தில் நாகபாசப் படலத்திலுள்ள கருட பகவான் செய்த துதிகளைப்பாடி, நாகத்தினால் கடியுண்டிறக்குந் தருவாயிலிருந்த ஒருவனை ஒருபக்தர் உயிர்ப்பித்ததாக நான் கம்பராமாயணம் பாடங் கேட்டகாலத்தில் என் குருநாதராகிய சிவாநந்த சாகர யோகீச்வரவர் எனக்குக் கூறினார்கள். இதுபோலவே கம்பராமாயணத்திலுள்ள ஏனைய துதிகளும் பயன்தருதல் திண்ணம் என்று கருதி, உடனே கம்பராமாயணத்திலுள்ள துதிகளையெல்லாம் திரட்டி நூறு என்கிற ஒருகணக்கிற்குள்ளாக்கி வைத்துக்கொண்டு சமயம் நேரிட்டபோதெல்லாம் படித்துத் துதித்து மகிழ்வுறலானேன். அப்பால் அதனை அச்சிட்டு உலகுக்கு உபகரிக்க வேண்டுமென்கிற அவாவுமுண்டாயிற்று. அந்த அவாவுண்டாய்ப் பல வருஷங்களாயினும் அதனை நிறைவேற்றச் சமயம் வாய்க்காமலே யிருந்தது. "அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்தகருமங்களாகா" என்ற ஆன்றோர் வாக்கு வீண்போவதில்லை யல்லவா?

இடுக்கணுற்றபோது பகவானைச் சரணமடைந்து துதிப்பது அவ்விடுக்கணை ஒழிப்பதற்கு உபாய மாகுமென்பதை அறிஞர் நன்குணர்வர். இச்சமயம் அந்த உபாயத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டமையால் அந்தவழியில் பகவதாராதனை செய்து மகிழ்ந்த அடியேன் இதனை அச்சிடவும் துணிந்தேன்.

இந்தத் துதிகளுக்கெல்லாம் குறிப்புரையேனும் எழுத வேண்டுமென்கிற அவா வுண்டாயது. ஆலோசிக்கையில் அரிய பெரிய கருத்துக்களடங்கிய இத்துதிகளுக்கு விஸ்தாரமான உரையே சிறப்புடையதாகுமென்று தெரியவந்தபடியால் அந்த அவாவை மறந்தனன். இந்தத் துதிகளை மந்திரங்கள்போலக் கருதித் துதித்துப் பக்தர்கள் பகவானுடைய திருவருளைப் பெறுவார்களாக.

சென்னை,<br>
9—7—34.

திரு. அ. சுப்ரமண்யபாரதி.

శ్రీరామజయం.

# శ్రీ రామ స్తోత్రమ్.

సుగ్రీవ మిత్రం పరమం పవిత్రం
సీతాకళత్రం నవమేఘ గాత్రం
కారుణ్య పాత్రం శతపత్ర నేత్రం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (1)

సంసారహారం నిగమప్రచారం
రామావతారం హృతభూమి భారం
సదావికారం సుఖసింధు సారం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (2)

లక్ష్మీవిలాసం జగతాం నివాసం
లంకావినాశం భువనప్రకాశం
భూదేవవాసం చరదిందు హాసం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (3)

మందారమాలం వచనేరసాలం
గుణైర్విశాలం హతసప్తతాలం
క్రవ్యాదకాలం సురలోకపాలం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (4)

వేదాన్తగానం సకలైస్సమానం
హతారిమానం త్రిదశప్రదానం
గజేంద్రయానం విగతావసానం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (5)

శ్యామాభిరామం నయనాభిరామం
గుణాభిరామం వచనాభిరామం

విశ్వప్రణామం కృతభక్తకామం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (6)
లీలాశరీరం రణరంగ ధీరం
విశ్వైకసారం రఘువంశ హారం
గంభీరనాదం జితసర్వ వాదం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (7)
కాలేకృతాంతం స్వజనేవినీతం
సామోపగీతం మనసాప్రతీతం
రాగేనగీతం వచనాదతీతం
శ్రీరామచంద్రం సతతం నమామి. (8)

---

వామేభూమి సుతాపురశ్చ హనుమాౕ
పశ్చాత్ సుమిత్రాసుత
శ్శత్రుఘ్నో భరతశ్చపార్శ్వ దళయో
ర్వాయ్వాది కోణేషుచ.
సుగ్రీవశ్చ విభీషణశ్చ యువరాట్
తారాసుతో జాంబవాౕ
మధ్యే నీలసరోజకోమలరుచిం
రామంభజే శ్యామలం.

---

రామరామ నమోస్తుతే జయ
రామభద్ర నమోస్తుతే
రామచంద్ర నమోస్తుతే జయ
రాఘవాయ నమోస్తుతే.

శుభం.

---

ஸ்ரீராமஜயம்.

# ஸ்ரீராம ஸ்தோத்ரம்.

## (ஸம்ஸ்கிருதம்)

---

ஸுக்ரீவ மித்ரம் பரமம் பவித்ரம்
ஸீதாகளத்ரம் நவமேக காத்ரம்
காருண்ய பாத்ரம் சதபத்ர நேத்ரம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (1)

ஸம்ஸார ஹாரம் நிகமப்ர சாரம்
ராமாவதாரம் ஹ்ருதபூமி பாரம்
ஸதாவிகாரம் ஸுகஸிந்து ஸாரம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (2)

லக்ஷ்மீவிலாஸம் ஜகதாம் நிவாஸம்
லங்காவிநாசம் புவன ப்ரகாசம்
பூதேவவாஸம் சரதிந்து ஹாஸம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (3)

மந்தாரமாலம் வசநே ரஸாலம்
குணைர்விசாலம் ஹதஸப்த தாலம்
க்ரவ்யாதகாலம் ஸுரலோக பாலம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (4)

வேதாந்த கானம் ஸகலைஸ் ஸமானம்
ஹதாரிமானம் த்ரிதசப் ரதானம்
கஜேந்த்ரயானம் விகதாவ ஸானம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (5)

ச்யாமாபிராமம் நயனாபி ராமம்
குணாபிராமம் வசனாபி ராமம்
விச்வப்ரணாமம் க்ருதபக்த காமம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (6)

லீலா சரீரம் ரணரங்க தீரம்
விச்வைகஸாரம் ரகுவம்ச ஹாரம்
கம்பீரநாதம் ஜிதஸர்வ வாதம்
ஸ்ரீராமசந்த்ரம் ஸததம் நமாமி. (7)

காலேக்ருதாந்தம் ஸ்வஜநேவிநீதம்
ஸாமோபகீதம் மனஸாப்ரதீதம்
ராகேணகீதம் வசனாததீதம்
ஸ்ரீராமசந்தரம் ஸததம் நமாமி. (8)

---

வாமேபூமி ஸுதாபுரச்ச ஹநுமான்
பச்சாத் ஸுமித்திரா ஸுத:
சத்ருக்நோ பரதச்சபார்ச் வதளயோர்
வாய்வாதி கோணேஷுச
ஸுக்ரீவச்ச விபீஷணச்ச யுவராட்
தாராஸுதோ ஜாம்பவாந்
மத்யேநீளஸரோஜ கோமலருசிம்
ராமம் பஜேச்யாமலம்.

---

ராமராம நமோஸ்துதே ஜய
ராமபத்ர நமோஸ்து தே
ராமசந்த்ர நமோஸ்துதே ஜய
ராகவாய நமோஸ்து தே.

சுபம்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# ஸ்தோத்ர ராமாயணம்

(கம்பராமாயணத்திலிருந்து திரட்டப்பெற்றது)

## பாலகாண்டம்

### கம்பர் தாம் எடுத்துக்கொண்ட காவியம் இனிது முடிதற் பொருட்டும் அது நின்று நிலவுதற் பொருட்டும் செய்த துதிகள்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. 1

சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத லன்றரோ. 2.

ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார். 3.

## அயோத்யா காண்டம்

### காப்பு ஸ்துதி

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும் போ
லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
இடுக்கண் தீர்த்த கழல்வேந்தே 4.

## ஆரண்ய காண்டம்

### காப்பு ஸ்துதி

பேதி யாதுநிமிர் பேத வுருவம் பிறழ்கிலா
ஓதி யோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும்
வேத வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதி தேவ ரவரெம் மறிவினுக் கறிவரோ. 5.

### விராதன் செய்த துதி

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றுவ்வாப்
பூதங்கள் தொறும்முறைந்தால் அவையுன்னைப் பொறுக்கு
[மோ 6.

கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறுதுய
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேயென் [ரால்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய். 7.

புறங்காண அகங்காணப் பொதுமுகத்தின் அருள்நோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பெருமானன் இயம்புதியால்
அறங்காத்தற் குனக்கொருவ ராருமொரு துணையின்றிக்
கறங்காகும் எனத்திரிய நீயேயோ கடவாய்தான். 8.

துறப்பதே தொழிலாகத் தோன்றினோர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மையது அன்றாகின் மற்றவர்போல்
பிறப்பரோ எவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
இறப்பதே பிறப்பதே எனும்விளையாட் டினிதுகந்தோய். 9.

பணிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நணிநின்ற சமயத்தோர் எல்லாரும் நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதற்றேவர் என்கொண்டென் செய்வாரோ 10.

ஓயாத மலரயனே முதலாக உளராகி
மாயாத வானவர்க்கும் மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதற்றாதை நெறிமுறையால் ஈன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி. 11.

நீயாதி பரம்பரமும் நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமும்நின் அடியவே அயலில்லை
தீயாரில் ஒளித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ ?
வீயாத பெரும்மாயை விளையாட்டும் வேண்டுமோ ? 12.

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயும் அறியும் உலகின்தாய் ஆகில் ஐய
நீயறிதி எப்பொருளும் அவையுன்னை நிலையறியா
மாயைஇது என்கொலோ வாராதே வரவல்லாய். 13.

பன்னலாம் என்றுலகம் பலபலவும் நினையுமால்
உன்னலால் பெருந்தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கன்றே
அன்னவூர் தியைமுதலாம் அந்தணர்மாட் டருந்தெய்வம்
நின்னலால் இல்லாமை நெறிநின்றார் நினையாரோ ? 14.

பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர்
இருவினையும் உடையார்போல் அருந்தவம்நின் றியற்றுவார்
திருவுறையும் மணிமார்ப நினக்கென்னை செயற்பால
ஒருவினையும் இல்லார்போல் உறங்குதியால் உறங்காதாய் 15.

அரவாகிச் சுமத்தியால் அயில்எயிற்றின் ஏந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியால் ஓரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை இஃதறிந்தால் சீறாளோ
மருவாருந் துழாய்அலங்கல் மணிமார்பில் வைகுவாள். 16.

மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறையுண்டோ
வய்யத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
அய்யத்தால் சிறிதையம் தவிர்ந்தாரும் உளரையா. 17.

அன்னமாய் அருமறைகள் அறைந்தாய்நீ அவையுன்னை
முன்னமார் ஓதுவித்தார் எல்லாரும் முடிந்தாரே
பின்னமாய் ஒன்றுதல் பிறிந்தேயோ பிறியாதோ
என்னமா மாயமிவை ஏனமாய் மண்இடந்தாய். 18.

ஒப்பிறையும் பெறல்அரிய ஒருவாமுன் உவந்துறையும்
அப்புறையுள் துறந்தடியேன் அருந்தவத்தால்அணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தேன் இனிப்பிறவேன் இருவினையும்
துப்புறமும் நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய்நீ. 19.

## சரபங்க மகரிஷியைப் பிரம்மலோகம் அழைத்துப் போகவந்த இந்திரன் ஸ்ரீராமபிரானைக் கண்டு துதிக்கும் துதி

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற
சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லாம்
நிலயமே வேத நெறிமுறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே பகையால்
அலைப்புண் டடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்த வரம்உதவ எய்தினையே எந்தாய்
இருநிலத்த வோநின் இணையடித்தா மரைதாம். 20.

மேவா தவரில்லை மேவினரு மில்லை
வெளியோ டிருளில்லை மேல்கீழு மில்லை
மூவா தமையில்லை மூத்தமையு மில்லை
முதலிடையோ டீறில்லை முன்னோடு பின்னில்லை
தேவாவிங் கிவ்வோநீ சென்றநிலை யென்றால்
சிலையேந்தி வந்தெம்மைச் சேவடிகள் நோவக்
காவா தொழியிற் பழிபெரிதோ வன்றேற்
கருங்கடலிற் கண்வளர்வாய் கைம்மாறு முண்டோ 21.

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழிபல பலவு நின்றளந்தா லொன்றும்
உலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்டயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தாய்
அவுணர்கள்தாம் நின்னடிமை யல்லாமை யுண்டோ ?

ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
உணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்று சறுங்காலத் தந்நிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே எங்கள்
நவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையும் நீதந்த தன்றே. 23.

வல்லைவரம் பில்லாத மாயவினை தன்னால்
மயங்கினரோ டெய்தி மதிமயங்கி மேனாள்
அல்லை யிறையவன்நீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னை யறப்பயனுண் டாக
எல்லை வலயங்கள் நின்னுழையென் றந்நாள்
எரியோனைத் தீண்டி யெழுவரென நின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற ஐயந் துடைத்திலையோ எந்தாய். 24.

## கவந்தன் செய்த துதி

ஈன்றவனே எப்பொருளும் எல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் தனிப்பயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி யிருவினையேன் சாபத் திடர்துடைத்தாய். 25.

மூலமே யில்லா முதல்வனே நீமுயலும்
கோலமே யார்க்கும் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ ஆலி னடையோ அடைகிடந்த
பாலனோ ஆதிப் பரனோ பகராயே. 26.

காண்பார்க்கும் காணப் படுபொருட்கும் கண்ணாகிப்
பூண்பாய்போல் நிற்றியால் யாதொன்றும் பூணுதாய்
மாண்பா லுலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ. 27.

ஆதிப் பிரமனும்நீ ஆதிப் பரமனும்நீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினும்நீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேதமுறை செய்தால் வெள்காரோ வேறுள்ளார். 28.

எண்திசையும் திண்சுவரா ஏழேழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோயிற் கெல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்மே லென்று மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா. 29.

மண்பா லமரர் வரம்பாருங் காணுத
எண்பா லுயர்ந்த எரியோங்கு நல்வேள்வி
உண்பாய்நீ யூட்டுவாய் நீயிரண்டும் ஒக்கின்ற
பண்பா ரறிவார் பகராய் பரமேட்டி. 30.

நிற்கு நெடுநீத்த நீரில் முளைத்தெழுந்த
மொக்குளே போல முரணிற்ற அண்டங்கள்
ஒக்கவுயர்ந் துன்னுளே தோன்றி யொளிக்கின்ற
பக்கம் அறிதற் கெளிதோ பரம்பரனே. 31.

நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீள்மறைகள்
உன்செய்கை யன்னவைதாம் சொன்ன ஒழுக்கினவோ
என்செய்தேன் முன்ன மறஞ்செய்கை எய்தினார்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வம் நீதந்தாய். 32.

மாயப் பிறவி மயல்நீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த எம்பெருமான்
நாயொத்தேன் என்ன நலனிழைத்தேன் நான்அந்தோ. 33.

## கிட்கிந்தா காண்டம்

### காப்பு ஸ்துதி

மூன்றுரு வெனக்குணம் மும்மை யாமுதல்
தோன்றுரு எவையும்இம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவர்
சான்றுரு உணர்வினுக் குவந்த தாயினன். 34.

### மராமரம் எய்தபோது ஸுக்ரீவன் செய்த துதி

வெய்யம்நீ வானும்நீ மற்றும்நீ மலரின்மேல்
அய்யன்நீ ஆழிநீ ஆழிவாழ் அமலன்நீ
செய்யதீ வினைதெறுந் தேவும்நீ நாயினேன்
உய்யவந் துதவினய் உலகமுந் துதவினய். 35.

என்னெனக் கரியதெப் பொருளும்எற் கெளிதலால்
உன்னையித் தலைவிடுத் துதவினர் விதியினர்
அன்னையொப் புடையவுன் அடியருக் கடியன்யான்
* உன்னியும் உளுற்றியும் உரைசெய்தும் உய்வனல். 36.

### வாலிசெய்ததுதி

ஏவுகூர் வாளியால் எய்துநாள் தீயனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்தருளினய்
மூவர்நீ முதல்வன்நீ முற்றும்நீ மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகையும்நீ உறவும்நீ. 37.

---

* இந்த அடி கம்பர் வாக்கன்று.

புரமெலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலாம் உருவியென் உயிரெலாம் நுகரும்நின்
சரமலால் பிறிதுவே றுளதரோ தருமமே. 38.

மாவலச் சூலியார் வாழ்த்துநர்க் குயர்வரம்
ஓவலற் றுதவல்நின் ஒருதனிப் பெயரியம்
பாவலிப் புடைமையால் ஆகுமப் பொருளையாம்
தேவநிற் கண்டவெற் கரிதெனோ தேரினே. 39.

யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையாய்
ஆவனீ யாவதென் றறிவினு ரருளினர்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோய். 40.

உண்டெனுந் தருமமே உருவமா யுடையநிற்
கண்டுகொண் டேனினிக் காணவென் கடவனே
பண்டொடின் றளவுமே என்பெரும் பழவினைத்
தண்டமே யடியனேற் குறுபதந் தருவதே. 41.

## சுந்தர காண்டம்

### காப்பு ஸ்துதி

அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்
அவரென்பர் கைவில் ஏந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே
மறைகளுக் கிறுதி யாவார். 42.

## யுத்த காண்டம்

### காப்பு ஸ்துதி

ஒன்றே யென்னின் ஒன்றேயாம்
பலவென் றுரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னின் அன்றே யாம்
ஆமே யென்னின் ஆமேயாம்
இன்றே யென்னின் இன்றே யாம்
இலதென் றுரைக்கின் இலதேயாம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா. 43.

### பிரகலாதன் தன்னைக் கடலில் வீழ்த்தியபோது செய்த துதி

அடியா ரடியேன் எனும்ஆர் வம்அலால்
ஓடியா வலியான் உடையேன் உளனே
கொடியாய் குறியாய் குணம்ஏ தும்இலாய்
நெடியாய் அடியேன் நிலைநேர்குதியோ. 44.

கள்ளந் திரிவார் அவர்கை தவம்நீ
உள்ளந் தெரியா தவுனக் குளவோ
துள்ளும் பொறியின் நிலைசோ தனைதான்
வெள்ளந் தருமின் னமுதே விதியோ. 45.

வருநான் முகனும் முகன்வா னவர்கோன்
திருநான் மறையின் நெறியே திரிவார்
பெருநாள் தெரிகின் றிலர்பே தைமையேன்
ஒருநாள் உனையெங் ஙனம்உள் ளுவனே. 46.

செய்யா தனவோ இலேதீ வினைதான்
பொய்யா தனவந் துபுணர்ந் திடுமோல்
மெய்யே உயிர்தீர் வதொர்மேல் வினைநீ
அய்யா ஒருநா ளும்அயர்த் தனையோ. 47.

ஆயப் பெறுநன் னெறிதம் அறிவென்
றேயப் பெறும்ஈ சர்கள்எண் ணிலரால்
நீயப் புறம்நிற் கநினைக் கிலர்நின்
மாயப் பொறிபுக் குமயங் குவரால். 48.

தாமே தனிநா யகராய் எவையும்
போமே பொருளென் றபுரா தனர்தாம்
யாமே பரமென் றனரென் றவர்க்
காமே பிறர்நின் னலதா ருளரே. 49

ஆதிப் பரமாம் எனிலன் றெனலாம்
ஓதப் பெருநூல் களுலப் பிலவால்
பேதிப் பனநீ யவைபேர் கிலையால்
வேதப் பொருளே விளையா டுதியே. 50.

அம்போ ருகனூர் அரனு ரறியார்
எம்போ லியரெண் ணிடினென் பலவாங்
கொம்போ டடைபூக் கனிகாய் எனினும்
வம்போ மரமொன் றெனும்வா சகமே. 51.

நின்னிற் பிறிதாய் நிலையிற் றிரியா
தன்னிற் பிறிவா யினதா னறமும்
உன்னிற் பிறிதா யினவோ வுலகம்
பொன்னிற் பிறிதா கியபொற் கலனே. 52.

தாய்தந் தைையெனுந் தகைவந் தனைதான்
நீதந் தனைநீ யுறுநெஞ் சினனுன்
நோய்தந் தவனே நுவல்தீர் வுமெனு
வாய்தந் தனசொல் லிவணங் கினனுல். 53.

## பகவான் பிரகலாதன்முன் பிரஸன்னமானபோது

## பிரம்மதேவன் செய்த துதி

தன்னைப் படைத்ததுவுந் தானே யெனுந்தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும் பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ யென்ருல் உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய்நீ யெனுமிதுவு மெற்ருமோ ? 54.

பல்லா யிரங்கோடி அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குளெனத் தோன்றுமால் நின்னுழையே
எல்லா வுருவமுமாய் நின்றக்கால் இவ்வுருவம்
வல்லே படைத்தால் வரம்பின்மை வாராதோ 55.

பேரை யொருபொருட்கே பல்வகையாற் பேர்த்தெண்ணும்
தாரை நிலையை தமியை பிறரில்லை
யாரைப் படைக்கின்ற தியாரை யளிக்கின்ற
தியாரைத் துடைக்கின்ற தையா அறியேமால். 56.

நின்னுளே யென்னை நிருமித்தாய் நீயல்லா
தென்னுளே எப்பொருளும் யாவரையும் யானீன்றேன்
பின்னிலேன் முன்னிலேன் எந்தை பெருமானே-
பொன்னுளே தோன்றியதோர் பொற்கலனே போல்கின்
றேன். 57.

ஆழிநீ அனலும் நீயே அல்லவை யெல்லாம் நீயே
ஊழிநீ யுலகம் நீயே அவற்றுறை உயிரும் நீயே
வாழியாய் அடியேன் நின்னை மறப்பனோவயங்குசெந்தீச்
சூழுற வுலைந்து போனேன் காத்தருள் சுருதி மூர்த்தி. 58.

காட்டுவா யுலகங் காட்டிக் காத்தவை கடையிற் செந்தீ
ஊட்டுவா யுண்பாய் நீயே உனக்குமொண் ணாத துண்டோ
தீட்டுவான் பகழி யொன்றால் உலகங்க ளனைவையுந் தீய
வீட்டுவாய் நினையி னாயேற் கித்தனை வேண்டு மோ தான். 59.

சண்டவான் கிரண வாளால் தயங்கிருட் காடு சாய்க்கும்
மண்டலத் துறையுஞ் சோதி வள்ளலே மறையின் வாழ்வே
பண்டைநான் முகனே யாதிச் சராசரத் துள்ள பள்ளப்
புண்டரீ கத்து வைகும் புராதனா போற்றி போற்றி. 60.

கள்ளமா யுலகங் கொள்ளுங் கருணையால் மறையிற் கூறும்
எள்ளலா காத மூலத் தியாதுக்கும் முதலா யுள்ள
வள்ளலே காத்தி யென்ற மாகரி வருத்தந் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனா போற்றி போற்றி.

அன்னைநீ அத்தன் நீயே அல்லவை யெல்லாம் நீயே
பின்னுநீ முன்னும் நீயே பேறுநீ யிகழ்வு நீயே
என்னைநீ யிகழ்ந்த தென்ற தெங்ஙனே யீச னைய
உன்னைநீ யுணராய் நாயேன் எங்ஙனம் உணர்வேனுன்னை 62.

பாயிருள் சீக்குந் தெய்வப் பரிதியைப் பழிக்கு மாலை
மாயிருங் கரத்தான் மண்மே லடியுறை யாக வைத்துத்
தீயன சிறியோர் செய்தால் பொறுப்பது பெரியோர் மேற்றே
ஆயிர நாமத் தையா சரணநின் அடிம லர்க்கே. 63.

## நாகபாசப் படலத்தில் ஸ்ரீ கருடபகவான் செய்த துதி

தேவாதி தேவர் பலரா லுமுந்து
திருநாம மோது செயலோய்
மூவாத நாளு முலகேழொ டேழும்
அரசாளு மேன்மை முதல்வா
மேவாத இன்பம் அவைமேவி மேவ
நெடுவீடு காட்ட முடியாய்
ஆவாய் வருந்தி யழிவாய்கொ லாரிவ்
அதிரேக மாயை யறிவார். 64.

எழுவா யெவர்க்கு முதலாகி யீறு
டிடையாகி யெங்கு முளையாய்
வழுவாத வர்க்கும் வரமீய வல்லை
யவரால் வரங்கள் பெறுவாய்
தொழுவா யுணர்ச்சி தொடராத தன்மை
யுருவாய் மறைந்து துயரால்
அழுவா யொருத்த னுளைபோ லுமாரிவ்
அதிரேக மாயை யறிவார். 65.

உன்னைக்க வைத்த இருவர்க்கு மொத்தி
யொருவர்க்கு முண்மை யுரையாய்
முன்னைக்க நிற்றி யுலகொக்க வொத்தி
முடிவொக்கி னைன்று முடியாய்
என்னைக்கு மின்ன செயலோ விதென்னி
லிருளொக்கு மென்று விடியாய்
அந்நொப்ப மேகொல் பிறிதேகொ லாரிவ்
அதிரேக மாயை யறிவார். 66.

வாணு ளளித்தி முடியாமல் நீதி
வருநாளும் நிற்றி மறையோய்
பேணு யுனக்கொர் பொருள் வேண்டு மென்று
பெறுவா னருத்தி பிழையாய்
ஊணு யுயிர்க்கு முயிராகி நிற்றி
யுணர்வாய பெண்ணி னுருவாய்
ஆணுகி மற்றும் அலியாகி யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 67.

தானந்த மில்லை பலவென்னு மொன்று
தனியென்னு மொன்று தவிரா
ஞானந் தொடர்ந்த சுடரென்னு மொன்று
நயனந் தொடர்ந்த வொளியால்
வானந் தொடர்ந்த பதமென்னு முன்னை
மறைநாலின் வந்த முறையால்
ஆனந்த மென்னு மயலென்னு மாரிவ்
அதிரேக மாயை யறிவார். 68.

மீளாத வேத முடிவின்க ணின்னை
மெய்யாக மெய்யி னினையும்
கேளாத வென்று பிறவென்று சொன்ன
கெடுவார்கள் சொன்ன கடவால்
மாளாத நீதி யிகழாமை நின்கண்
அபிமான மில்லை வறியோர்
ஆளாயும் வாழ்தி யரசாள்தி யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 69.

சொல்லொன் றுரைத்தி பொருளாதி தூய
மறையுந் துறந்து திரிவாய்

வில்லொன் றெடுத்தி சரமொன் றெடுத்தி
மிளிர்சங்க மங்கை யுடையாய்
கொல்லென் றுரைத்தி கொலையுண்டு நிற்றி
※கொடியாயுன் மாயை யறியேன்
அல்லென்று நிற்றி பகலாதி யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 70.

மறந்தாயு மொத்தி மறவாயு மொத்தி
மயலாரும் யானு மறியேம்
துறந்தாயு மொத்தி துறவாயு மொத்தி
யொருதன்மை சொல்ல வரியாய்
பிறந்தாயு மொத்தி பிறவாயு மொத்தி
பிறவாம னல்கு பெரியோய்
அறந்தா னிறுத்த லரிதாக வாரிவ்
அதிரேக மயை யறிவார். 71.

வினைவர்க்க முற்றும் உடனே படைத்தி
அவையெய்தி யென்றும் விளையா
நினைவர்க்கு நெஞ்சின் உறுகாம முற்றி
யறியாமை நிற்றி மனமா
முனைவர்க்கு மொத்தி யமரர்க்கு மொத்தி
முழுமூட ரென்றிம் முதலோர்
அனைவர்க்கு மொத்தி யறியாமை யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 72.

எறிந்தாரும் ஏறு படுவாரும் இன்ன
பொருள்கண் டிரங்கு பவரும்
செறிந்தாரின் நுண்மை யெனலாய தன்மை
தெரிகின்ற துன்ன திடையே

---

※ கொடியாய் - கோணலாய் இருக்கிறவனே.

பிறிந்தார் பிறிந்த பொருளோடு போதி
பிறியாது நிற்றி பெரியோய்
அறிந்தா ரறிந்த பொருளாதி யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 73.

பேரா யிரங்க ளுடையாய் பிறந்த
பொருடோறு நிற்றி பிரியாய்
தீராய் பிரிந்து திரிவாய் திறந்தொ
றவைதேறு மென்று தெளியாய்
கூராழி யங்கை யுடையாய் திரண்டொ
ருருவாதி கோட லுரிபோல்
ஆராயி னேது மிலையாதி யாரிவ்
அதிரேக மாயை யறிவார். 74.

### பிரமாத்திரப் படலத்தில் தேவர்கள் செய்த துதி

உன்னை யுள்ள படியறியேம்
உலகை யுள்ள திறமுள்ளேம்
பின்னையறியேம் முன்னறியேம்
இடையு மறியேம் பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியில் நிற்கு மதுவல்லால்
என்னை யடியேஞ் செயற் பால
இன்ப துன்ப மில்லோனே. 75

அரக்கர் குலத்தை வேரறுத்தெம்
அல்லல் நீக்கி யருளாயென்
றிரக்க எம்மேற் கருணையினல்
இயையா வுருவ மிஃதெய்திப்

புரக்கு மன்னர் குடிப்பிறந்து
போந்தா யறத்தைப் பொறைதீர்ப்பான்
கரக்க நின்றே நெடுமாயம்
எமக்குங் காட்டக் கடவாயோ. 76.

ஈன்றெம் இடுக்கண் துடைத்தளிப்பான்
இரங்கி அரச ரிற்பிறந்தாய்
மூன்றும் உலகம் துயர்தீர்த்தி
என்னு மாசை முயல்கின்றேம்
ஏன்று மறந்தேம் அவனல்லன்
மனித னென்றே யிதுமாயம்
போன்ற தில்லை ஆளுடையாய்
பொய்யும் புகலப் புக்காயோ? 77.

அண்டம் பலவு மனைத்துயிரும்
அகத்தும் புறத்தும் உளவாக்கி
உண்டும் உமிழ்ந்தும் அளந்திடந்தும்
உள்ளும் புறத்து முளையாகிக்
கொண்டு சிலம்பி தன்வாயிற்
கூர்நூ லியையக் கூடியற்றிப்
பண்டும் இன்றும் அமைக்கின்ற
படியை யொருவாய் பரமேட்டி. 78.

துன்ப விளையாட் டிதுவேயும்
உன்னைத் துன்பந் தொடர்பின்மை
இன்ப விளையாட் டாமெனினும்
அறியா தேமுக் கிடருற்றால்,
அன்பு விளையும் அருள்விளையும்
அறிவு விளையும் அவையெல்லாம்;

முன்பு பின்பு நடுவில்லாய்
முடித்தா லன்றி முடியாவே. 79.

வருவாய் போல வாராதாய்
வந்தா யென்று மனங்களிப்ப
வெருவா திருந்தே நீயிடையே
துன்பம் விளைக்க மெலிகின்றேம்
கருவா யளிக்குங் களைகண்ணே
நீயே யிதனைக் களையாயேல்
திருவாழ் மார்ப நின்மாயை
எம்மால் தீர்க்கத் தீருமோ ? 80.

அம்ப ரீடற் கருளியதும்
அயனூர் மகனூர்க் களித்ததுவும்
எம்பி ரானே யெமக்கின்று
பயந்தா யென்றே யேமுறுவேம்
வெம்பு துயரம் நீயுழக்க
வெளிகா ணாது மெலிகின்றேம்
தம்பி துணைவ நீயிதனைத்
தவிர்த்தெம் உணர்வைத் தாராயோ ? 81.

## மீட்சிப்படலம் - பிரம்மதேவன் செய்த துதி

மன்னர் தொல்குலத் தவரினத் துணையொரு மனித்தன்
என்ன வுன்னலை யுன்னைநீ யிராமகே ளிதனைச்
சொன்ன நான்மறைத் துணிவுனிற் றுணிந்தமெய்த் துணிவு
நின்ன லாதிலை நின்னில்வே றுளதிலை நெடியோய். 82.

பகுதி யென்றுள தியாதினும் பழையது பயந்த
விகுதி யால்வந்த விளைவுமற் றதற்குமேல் நின்ற
புகுதி யாவர்க்கும் அரியவப் புருடனு நீயிம்
மிகுதி யுன்பெரு மாயையி னூல்வந்த வீக்கம். 83.

முன்பு பின்பிரு புடையெனும் குணிப்பரு முறைமைத்
தன்பெ ருந்தன்மை தான்றெரி மறைகளின் றலைகள்
மன்பெ ரும்பர மார்த்தமென் றுரைக்கின்ற மாற்றம்
அன்ப நின்னையல் லான்மற்றிங் கியாரையு மறையா. 84.

எனக்கும் எண்வகை யொருவற்கும் இமையவர்க் கிறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கும் உயிருடன் தழீஇய
அனைத்தி னுக்குநீ யேபர மென்பதை யறிந்தார்
வினைத்து வக்குடை வீட்டருந் தளைநின்று மீள்வார். 85

என்னைத் தான்முத லாகிய வுருவங்க ளெவையும்
முன்னைத் தாய்தந்தை யெனும்பெரு மாயையின் மூழ்கித்
தன்னைத் தானறி யாமையிற் சலிப்பவச் சலந்தீர்ந்
துன்னைத் தாதையென் றுணர்குவ முத்திவித் தொழிந்த 86.

ஐயஞ் சாகிய தத்துவந் தெரிந்தறிந் தவற்றின்
மெய்யெஞ் சாவகை மேல்நின்ற நினக்குமேல் யாதும்
பொய்யெஞ் சாவில தென்னுமீ தருமறை புகலும்
வய்யஞ் சான்றினிச் சான்றுக்குஞ் சான்றிலை வழக்கால். 87.

அளவை யாலளந் தாமன்றென் றறிவுறு மமைதி
உளவை யாவையு முனக்கில்லை யுபநிடத் தனது
களவை யாய்ந்துறத் தெளிந்தில தாயினுங் கண்ணால்
துளவை யாய்முடி யாயுனை நீயெனத் துணியும். 88.

கரண மொன்றுள துன்னவந் தறிவுகா ணமே
அரண மல்லவர்க் கிவைகடந் தறிவரி தாக
மரணந் தோற்றமென் றிவற்றிடை மயங்குப வவற்றுன்
சரண மல்லதோர் சரணில்லை யன்னவை தவிர்ப்பான். 89.

தோற்ற மென்பதொன் றுனக்கில்லை நின்கணே தோற்றும்
ஆற்றல் சான்முதற் பகுதிமற் றதனுளாம் பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்க ளவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றுற்று வீவுறும் நீயென்றும் விளியாய். 90.

மின்னைக் காட்டுதல் போல்வந்து விளியுமெய் யுலகம்
தன்னைக் காட்டவுந் தருமத்தை நாட்டவுந் தனியே
என்னைக் காட்டுதி யிறுதியுங் காட்டுதி யெனக்கு
முன்னைக் காட்டிலை யொளிக்கினு மிலைமறை யுரையால். 91.

என்னு ருக்கொடிவ் வுலகினை யீனுதி யிடையே
உன்னு ருக்கொடு புகுந்துநின் றோம்புதி யுமையோன்
தன்னு ருக்கொடு துடைத்திமற் றிதுதனி யருக்கன்
முன்னு ருக்கொடு பகற்செயுந் தரத்தது முதலோய். 92.

திருக்கு வான்மலி செல்வத்துச் செருக்குவேம் திறத்துத்
தருக்கு மாய்வறத் தானவ ரரக்கர்வெஞ் சமரில்
இரிக்க மாழ்கிநொந் துனைப்புகல் யாம்புக இயையாக்
கருக்கு ளாய்வந்து தோற்றுதி யீங்கிது கடனே. 93.

ஓங்கா ரப்பொருள் தேருவோர் தாமுன்னை யுணர்வோர்
ஓங்கா ரப்பொருள் என்றுணர்ந் திருவினை யுகுப்போர்
ஓங்கா ரப்பொருள் ஆமன்றென் றாழிசென் றுளும்
ஓங்கா ரப்பொரு ளேபொரு ளென்கிலா வரவோர். 94.

---

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே. 95.

நன்மையுஞ் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினல். 96.

வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாஷையா தொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே. 97.

வென்றிசே ரிலங்கை யானை
வென்றமால் வீர மோத
நின்றரா மாய ணத்தில்
நிகழ்ந்திடு கதைக டம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும்
உரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது வென்றோர் தாமும்
நரகம தெய்தி டாரே. 89.

இராகவன் கதையில் ஒருகவி தன்னில்
ஏகபா தத்தினை யுரைப்போர்
பராவரு மலரோ னுலகினி லவனும்
பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதன மறையு மண்டர்பொற் பதமும்
பொன்றுநா ளதனினும் பொன்று
அராவணை யமல னுலகெனும் பரம
பதத்தினை யணுகுவ ரன்றே. 99.

## த னி ய ன்

இராவணன் தன்னை வீட்ட
இராமனுய் வந்து தோன்றித்
தராதல முழுதுங் காத்துத்
தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற
பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னும்
நமனையும் வெல்லு வாரே. 100.

சுபம்.

## எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்.

| | |
|---|---|
| பகவத்கீதை வசனஸங்க்ரஹம் படத்துடன் | 0—3—0 |
| இராமாயண வினாவிடை ... ... | 1—8—0 |
| பாரத வினாவிடை ... ... ... | 3—0—0 |
| ஸூதஸம்ஹிதை வசனம் ... ... | 1—0—0 |
| நளவெண்பா மூலமும் உரையும் ... ... | 2—0—0 |
| நைடதம் ,, ... ... | 4—0—0 |
| ஸரஸ்வதியந்தாதி ,, ... ... | 0—6—0 |

## முருகன் திருவருட் பெருமையை விளக்கும் நூல்கள்.

| | |
|---|---|
| மகாஸ்காந்தம் வசனம் ... ... | 5—0—0 |
| குமாரவிஜயம் ... ... ... | 1—0—0 |
| திருப்புகழ் இரண்டுபாகம் ... ... | 6—0—0 |
| சிவகுருவாக்யம் ... ... ... | 0—0—6 |
| குமரன் திருக்குரள் ... ... ... | 0—0—6 |
| செந்திலந்தாதி ... ... ... | 0—1—0 |
| கந்தரந்தாதி உரையுடன் ... ... | 0-12—0 |
| கந்தரநுபூதி ,, ... ... | 0—8—0 |
| கந்தர்சஷ்டி கவசம் ,, ... ... | 0—8—0 |
| கந்தர் அலங்காரம் ,, ... ... | 0—8—0 |
| கந்தர் கலிவெண்பா ... ... | 0—8—0 |

**ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,**
புத்தக வியாபாரம்,
பெரம்பூர், சென்னை.

விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடம், சித்தூர்:—1934.

## எங்களிடங் கிடைக்கும் அரிய நூல்கள்.

### (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு.)

| | |
|---|---|
| வால்மீகி ராமாயணம் ... ... | 15—0—0 |
| பாகவதம் ... ... ... | 9—0—0 |
| ஸ்காந்தம் ... ... ... | 5—0—0 |
| ஆநந்தராமாயணம் ... ... ... | 6—0—0 |
| தத்துவஸங்க்ரஹ ராமாயணம் ... ... | 4—0—0 |
| சுந்தரகாண்டம் பிரதிபத தாத்பரியம் ... | 2—8—0 |

### பண்டைத் தமிழ்வசன நூல்கள்.

| | |
|---|---|
| பாரதம் உயர்ந்தபதிப்பு ... ... | 18—0—0 |
| ஷை மட்டம் ... ... ... | 8—0—0 |
| கம்பராமாயணம் உயர்ந்தது ... ... | 9—0—0 |
| ஷை மட்டம் ... ... ... | 7—0—0 |
| கந்தபுராணம் உயர்ந்தது ... ... | 9—0—0 |
| ஷை மட்டம் ... ... ... | 5—0—0 |
| மஹா பக்தவிஜயம் ... ... ... | 8—0—0 |
| ஷை வேறுபதிப்பு ... ... | 3—0—0 |
| பெரியபுராணம் உயர்ந்தது ... ... | 3—0—0 |
| ஷை மட்டம் ... ... ... | 1—8—0 |
| திருவிளையாடற் புராணம் உயர்ந்தது ... | 3—0—0 |
| ஷை மட்டம் ... ... ... | 1—8—0 |
| பாகவத புராணம் உயர்ந்தது ... ... | 6—0—0 |
| ஷை பட்டம் ... ... ... | 3—0—0 |

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி - பெரம்பூர், சென்னை.

## எங்களிடங் கிடைக்கும் புத்தகங்கள்.

### செய்யுள் நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| மூவர் தேவாரம் உயர்ந்தது | ... | ... | 15—0—0 |
| ஷை மட்டம் ... | ... | ... | 5—0—0 |
| திருவாசகம் ... | ... | ... | 1—8—0 |

### அருட்பா.

| | | | |
|---|---|---|---|
| நாலாயிரப் பிரபந்தம் | ... | ... | 4—0—0 |
| கம்பராமாயணம் ... | ... | ... | 8—0—0 |

### பாகவதம்.

| | | | |
|---|---|---|---|
| நல்லாபிள்ளை பாரதம் | ... | ... | 12—0—0 |
| வில்லிபாரதம் ... | ... | ... | 3—8—0 |
| ஸ்காந்தம் ... | ... | ... | 6—0—0 |
| பெரியபுராணம் ... | ... | ... | 4—0—0 |

### செய்யுள் நூல் உரையுடன்.

| | | | |
|---|---|---|---|
| பட்டிணத்தார் பாடல் | ... | ... | 3—8—0 |
| தாயுமானவர் பாடல் | ... | ... | 4—0—0 |
| குசேலஉபாக்யானம் | ... | ... | 5—0—0 |
| திருக்குறள் (பரிமேலழகர், உரை, பதவுரை, கருத்துரை) ... | ... | ... | 4—0—0 |
| நாலடியார் - இங்கிலீஷ் | ... | ... | 2—0—0 |
| நீதிநெறி விளக்கம் ... | ... | ... | 0-10—0 |
| நீதிநூற்கொத்து - (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி) | ... | ... | 0—8—0 |
| அறப்பளீசுவர சதகம் | ... | ... | 0-12—0 |
| குமரேச சதகம் ... | ... | ... | 1—0—0 |

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி - பேரம்பூர், சென்னை.